செ. வெ. எண் : 643 நாள் : 11.08.2008

## பத்திரிகை செய்தி

உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழு கூட்டம் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை மற்றும் வக்ஃப் அமைச்சர் ஜனாப் T.P.M. மைதீன்கான் அவர்கள் தலைமையில் 11.08.2008 அன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. முதற்கண் கூட்டத்தில் உலமா ஓய்வூதியர்களின் எண்ணிக்கையை 2200 லிருந்து 2400 ஆக உயர்த்தியதையடுத்து, அதிகப்படியாக 200 உலமாக்கள் ஓய்வூதியம் பெற வழிவகுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உலமா ஓய்வூதியம் கோரி நிலுவையில் இருந்த 200 விண்ணப்பதாரர்களுக்கு உலமா ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது. இவர்களுடன் சேர்த்து மொத்தம் 2400 உலமாக்களுக்கு மாதம் ரூ.750/- வீதம் அவர்கள் வாழ்நாள் வரையில் உலமா ஓய்வூதியம் வழங்கப்படும். கூட்டத்தில்

1. ஜனாப். எம்.உறச்.சம்சுதீன்
2. ஜனாப். எம்.ஏ. ஜமாலுதீன்

ஆகிய உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மைச் செயல் அலுவலரும், உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக்குழுவின் உறுப்பினர்-செயலருமான ஜனாப். ஏ. முகம்மது ஜமாலுத்தீன் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார்.

11.8.08

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை மற்றும்
வக்ஃப் அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9